**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்**

**முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.2, திண்டுக்கல்**

**2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28–ம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.21/2011**

**CNR.No. TNDG03–000211–2011**

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
தாடிக்கொம்பு காவல் நிலையம்,
திண்டுக்கல்
குற்ற எண்.449/2009
U/s. 279, 353, 379, 506(i) IPC, and
36(A) 4, 21(5) of TN Mins & Minerals Act.

... குற்ற முறையிடுபவர்

/ எதிர் /

1. தர்மர், (30/2009), – A1
த/பெ. சின்னச்சாமி,
சொட்டமாயனூர்,
வேடசந்தூர் தாலுகா,
திண்டுக்கல்.

2.சின்னக்கருப்பன், (22/2010) – A2
த/பெ. சின்னச்சாமி,
சொட்டமாயனூர்,
வேடசந்தூர்(TK),

3. சின்னத்தம்பி (45/2009), – A3
த/பெ. கருப்பத்தேவர்,
சொட்டமாயனூர்,
வேடசந்தூர்(TK),

4. குமார், (35/2009) – A4
த/பெ. ஆறுமுகம்,
தட்டார்பட்டி,
வேடசந்துார்,
திண்டுக்கல்.

**(3, 4 எதிரிகள் இவ்வழக்கிலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு CCNo.1227/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது)**

**...எதிரிகள்**

## Case – Summary

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No. 21 of 2011 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Inspector of Police, Thadicombu Police Station, Dindigul in Cr.No.449/2009 |
| 3. | Name of the accused | Dharmar- A1<br>Chinnakaruppan-A2 |
| 4. | Father's Name | Chinnasamy – A1, A2 |
| 5. | Occupation | - |
| 6. | Residence | Chottamayanur, Vedasandur Taluk, Dindigul. – A1 A2 |
| 7. | Age | 30/2009 - A1<br>22/2010 - A2 |
| 8. | Date of occurrence | 08.10.2009 |
| 9. | Date of complaint<br>Date of filing Charge sheet | 08.10.2009<br>29.03.2010 |
| 10. | Date of apprehension | 30.10.2009 (Surrender) -A1<br>19.01.2010 (Surrender) -A2 |
| 11. | Date of release on bail | 30.10.2009 (Surrender) -A1<br>19.01.2010 (Surrender) -A2 |

<table>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s.207 Cr.P.C.</td><td colspan="3">18.11.2025</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 18.11.2025 the accused were questioned on substance of accusation U/s.279, 353, 379, 506(i) IPC, and 36(A) 4, 21(5) of TN Mins & Minerals Act. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="6">15</td><td rowspan="6">Date of commencements of trial -The date of examination – in chief and cross- examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>17.02.2026</td><td>17.02.2026</td></tr>
<tr><td>PW2</td><td>24.02.2026</td><td>24.02.2026</td></tr>
<tr><td>PW3</td><td>09.03.2026</td><td>-</td></tr>
<tr><td>PW4</td><td>09.03.2026</td><td>-</td></tr>
<tr><td>PW5</td><td>07.04.2026</td><td>07.04.2026</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">28.04.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, 1,2 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 279, 353, 379, 506(i) ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால் 1,2 எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>18.</td><td>Service of copy of Judgment or finding on accused</td><td colspan="3">No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts</td></tr>
<tr><td>19.</td><td>Explanation of delay</td><td colspan="3">There is no inordinate in the disposal of the case</td></tr>
<tr><td>20.</td><td>Property order</td><td colspan="3">Property order will be passed in CC 1227/2025.</td></tr>
</table>

இவ்வழக்கு கடந்த 29.03.2010ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.21/2011 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட 1, 2 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.மகாராஜன், B.A., B.L., என்பவர் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

### <u>I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 08.10.2009ம் தேதி மதியம் 1.15 மணிக்கு திண்டுக்கல் – எரியோடு ரோட்டில் RVS காலேஜ் அருகில் இவ்வழக்கின் 2வது எதிரி அரசுக்கு கனிம கட்டணம் செலுத்தாமல், அரசுக்கு சொந்தமான கனிம பொருளான ஆற்று மணலை சுமார் 2 யூனிட் அளவு உள்ளதை TN 63 – 3434 பதிவு நம்பர் உள்ள அரைபாடி லாரியில் ஏற்றி திருடிக்கொண்டு வந்ததாகவும், கனிமவள துறை அதிகாரிகளான சாட்சி 1 – 3 ஆகியவர்கள் மேற்படி லாரியை நிறுத்தச்சொல்லி சைகை காட்டியபோது அவர்களுக்கு தீங்கு ஏற்படும் நிலையில் லாரியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்ததாகவும், சாட்சிகள் லாரியை பின் தொடர்ந்து வந்து மணல் உள்ள

லாரியை மடக்கியபோது 2வது எதிரி லாரியை நிறுத்திவிட்டு இறங்கி ஓடி விட்டதாகவும், சாட்சிகள் மணல் உள்ள லாரியை கைப்பற்றிக் கொண்டு வரும்போது சீலப்பாடி பிரிவு அருகில் 1, 3, 4 எதிரிகள் மூன்று பேரும் TN 57 K 2325 என்ற எண்ணுள்ள மோட்டார் சைக்கிளில் வந்து சாட்சிகளை தடுத்து அரசு அலுவலை செய்யவிடாமல் கைப்பற்றிய லாரியை மறித்து, சாட்சிகளை கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 279, 353, 379, 506(i) IPC, and 36(A) 4, 21(5) of TN Mins & Minerals Act–ன் படி திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலைய காவல் ஆய்வாளரால் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>II.வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு குறித்து வினவுதல்:</u>**

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிகளுக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து எதிரிகளுக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பானை அனுப்பி அவர்கள் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து 1, 2 எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள் 279, 353, 379, 506(i) IPC, and 36(A) 4, 21(5) of TN Mines & Minerals Act–ன் கீழ் குற்றச்சாட்டை விளக்கிக்கூறி வினாவியபோது 1, 2 எதிரிகள் குற்றத்தை மறுத்ததால் 1, 2 எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 279, 353, 379, 506(i) IPC and 36(A) 4, 21(5) of TN Mines &

Minerals Act–ன் படி குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது குற்றவாளி இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**<u>III. அரசு தரப்பால் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

3. அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்க மொத்தம் அ.சா.1 முதல் அ.சா. 5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>IV. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :</u>**

4. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில் "கடந்த 08.10.2009–ம் தேதி திண்டுக்கல் கனிம வள மேம்பாட்டுத் துறையில் உதவி இயக்குனராக பணியிலிருந்தபோது கனிமவள கடத்துதல் தடுப்பு சம்மந்தமாக தானும் தனித்துணை வட்டாட்சியர் மீனாட்சி சுந்தரம் மற்றும் உதவி புவியியலாளர் திருமதி.ஜோதி ஆகியோர்களுடன் RVS பொறியியல் கல்லூரி அருகே சோதனை மேற்கொண்டபோது அவ்வழியாக குளத்தூரிலிருந்து திண்டுக்கல் நோக்கி வந்த செவந்தியம்மாள் என்ற பெயர் பலகையுடன் கூடிய TN 36–3434 என்ற லாரியை நிறுத்தி சோதனை மேற்கொள்ளும் போது லாரி சோதனைக்கு நிற்காமல் சென்றதையடுத்து நாங்கள் இருவரும் வாடகை காரில் லாரியை பின் தொடர்ந்து லாரியை முந்தி குறுக்காக காரை நிறுத்தியபோது லாரியில் வந்த நபர் லாரியை நிறுத்திவிட்டு அங்கிருந்து ஓடி தலைமறைவாகிவிட்டார் என்றும், அந்த லாரியில் சுமார் 2 யூனிட்

ஆற்று மணல் இருந்ததாகவும், எவ்விதமான அனுமதிச்சீட்டு இல்லை என்றும், மேற்படி லாரியை மாற்று ஓட்டுனரின் மூலம் மணலுடன் லாரியை அழைத்து வந்தபோது TN 57 K2323 என்ற Hero Honda Splender–ல் வந்த தர்மர் மற்றும் 2 நபர்கள் லாரியை வழிமறித்து லாரி டிரைவரையும், லாரியில் வந்த தனித்துணை வட்டாட்சியர் அவர்களையும் லாரியை எடுத்துச் செல்லக்கூடாது லாரியை ஒப்படையுங்கள் என்று மிரட்டினார்கள் என்றும், தான் சம்பவத்தை பார்த்து காரில் பின் தொடர்ந்து வந்தபோது என்னை பார்த்ததும், தர்மரும் அவருடன் வந்த 2 நபர்களும் தப்பிச்சென்றுவிட்டார்கள் என்றும், நடந்த சம்பவத்திற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், புகார் அ.சா.ஆ.1 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 அவரது சாட்சியத்தில் கடந்த 08.10.2009ம் தேதி GTN கல்லூரி அருகே கனிமவன கடத்தல் தடுப்பு சம்மந்தமாக வாகன சோதனை மேற்கொண்டபோது உடன் இருந்தது குறித்தும், காவல் நிலையத்தில் புகார் அளிக்கும் போது உடன் இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், தான் எப்போதும் காவல் துறையிடம் கையெழுத்து செய்து கொடுக்கவில்லை என்றும், தான் ஆங்கிலத்தில்தான் கையொப்பம் செய்வேன் என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

7. மற்றொரு பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும் தான் எப்போதும் காவல்துறையினரிடம் கையொப்பம் செய்து கொடுக்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

8. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5 தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 08.10.2009ம் தேதி கனிம வளத்துறை உதவி இயக்குநர் சொக்கலிங்கம் என்பவரிடம் புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 என்றும், வழக்கினை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 08.10.2009ம் தேதி மாலை 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வீராச்சாமி, ரவி முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ3, பார்வை மகஜர் அ.சா.ஆ.4 என்றும், பின்பு சாட்சிகள் சொக்கலிங்கம், தனித்துணை வட்டாட்சியர் மீனாட்சி சுந்தரம், உதவி புவியியலாளர் ஜோதி மற்றும் மாணிக்கம் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்ததாகவும், வாதி ஆஜர் செய்த மணலுடனான லாரியை கனம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து RPR.No.208/2009 ஆக பதிவுசெய்ததாகவும், விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவர எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் உரிய நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று கனம் நீதிமன்றத்தில் ஆஜரானதால் கைதுசெய்யவில்லை என்றும், வழக்கின் இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன் இறப்பின் காரணமாக

அவரது கையொப்பம், கையெழுத்து தனக்கு பரிட்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிப்பதாகவும், வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன் சாட்சிகள் சொக்கலிங்கம், மீனாட்சி சுந்தரம், ஜோதி, மாணிக்கம், வீராச்சாமி, ரவி ஆகியோர்களை விசாரிக்க தன்னிடம் சொன்ன சங்கதிகளையே அவரிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றும், பின்பு சார்பு ஆய்வாளர் தனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், படிவம் 91 அ.சா.ஆ.5 என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**<u>V. எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்</u>**

9. அரசு தரப்பில் சாட்சியத்தை முடித்துக் கொண்ட பின்பு 1, 2 எதிரிகளுக்கு பாதகமாக அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சங்கதிகளை கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் 28.04.2026ம் தேதி தொகுத்தளித்து வினாவியபோது அரசு தரப்பு சாட்சியங்களை "பொய் சாட்சி" என்று சாட்சியங்களை மறுத்தார்.

**<u>VI. எதிரிகள் தரப்பு சாட்சிகள்</u>**

10. 1, 2 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறினார்கள். அதனால், 1, 2 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

## VII. வாதுரைகள்

### 1. அரசு தரப்பில்

11. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும் போது 1, 2 எதிரிகளுக்கு எதிரான வழக்கு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரிகளிடமிருந்து வழக்குச் சொத்து கைப்பற்றப்பட்டதாகவும், அரசு தரப்பு எதிரிகள் மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கில் எதிரிகள் அனுமதியின்றி அரசுக்கு கனிம கட்டணம் செலுத்தாமல், அரசுக்குச் சொந்தமான மணலை திருடி வந்தார்கள் என்று சாட்சிகளின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

### 2. எதிரிகள் தரப்பில்

12. 1, 2 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்றும், தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும், இவ்வழக்கில் புகார்மனு தாக்கல் செய்யவில்லை என்றும், கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றும், எதிரிகள் மணலை திருடவில்லை என்றும், பொதுமக்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரிக்கப்படவில்லை என்றும், எதிரியை அடையாளம் காட்டி எந்த சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய மணலை பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை என்றும், அரசு தரப்பில் இவ்வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை

என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

## VIII.ஆய்விற்குரிய பிரச்சனை

13. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

## IX. தீர்வு

இவ்வழக்கில் 36(A) of TN Mines and Mineral Act and 4, 21(5) Mines and Minerals (Development and regulation) Act 1957–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி பிரிவில் குற்ற வனைவும் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி குற்றச்சாட்டு சிறப்பு அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கக்கூடிய குற்றம் என்பதால் இந்நீதிமன்றத்தில் மேற்படி குற்றச்சாட்டிற்கு தீர்வு காண இயலாது. எனவே, இவ்வழக்கின் குற்றச்சாட்டான இதச பிரிவுகள் 279, 353, 379, 506(i)–ஐ நிரூபிக்க வேண்டுமென்றால் கீழ்கண்ட அகக்கூறுகளை நிரூபித்தல் வேண்டும்.

- ஒருவர் பிறர் வசம் வைத்திருக்கும் அசையும் பொருளை அவருடைய சம்மதமின்றி, தன் வசம் ஆக்கி கொள்ள முயற்சி செயலை செய்தால் அது இதச பிரிவு 379 ஆகும்.

இவ்வழக்கு தீர்ப்புரையை படிக்கும்போது சிரமமின்றி புரிந்து கொள்வதற்காகவும், விவாதம் செய்யப்பட்ட தலைப்பு மீண்டும்

விவாதிக்கப்படாமல் தடுப்பதற்காகவும், இந்த தீர்ப்புரையானது மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

- குற்ற நிகழ்வு
- கைது, ஒப்புதல் வாக்குமூலம்,அதன் அடிப்படையில் கைப்பற்றுதல்
- புலன் விசாரணை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் குற்ற நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளதா?

## குற்ற நிகழ்வு

14. மேற்சொன்ன குற்ற நிகழ்வு நடந்துள்ளதா என்று பார்க்கும்போது அரசு தரப்பால் குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.1 ஆன புகாரைப் பரிசீலனை செய்யும்போது, 08.10.2009ம் நாள் மதியம் 1.15 PM மணியளவில் TN 63– 3434 செவந்தியம்மாள் என்ற பெயர் கொண்ட லாரி குளத்தூரிலிருந்து திண்டுக்கல் நோக்கி அசுர வேகத்தில் வந்தது என்றும், அப்போது கனிம உதவி இயக்குநர் தனது பணியாளர்களுடன் மேற்படி வண்டியை நிறுத்த அறிவுறுத்தியும் நிறுத்தாமல் சென்று விட்டதாகவும், மேற்படி வண்டியை பின்தொடர்ந்து செல்லமந்தாடி பாலத்தில் மறித்தபோது, லாரியின் டிரைவர் லாரியை நிறுத்திவிட்டு ஓடிவிட்டார் என்றும், பின்னர் மேற்படி லாரியை மாற்று ஓட்டுநரை வைத்து பாலத்தின் இறக்கத்தில் வந்தபோது GTN கல்லூரி அருகில் சீலப்பாடி பிரிவுக்கு அருகில் சொட்டமாயனூரைச் சேர்ந்த தர்மர் மற்றும் இரண்டு நபர்கள் TN 57 K 2325 என்ற எண்ணுள்ள நம்பர் உள்ள மோட்டார் சைக்கிளில் வந்து மாற்று ஓட்டுநர் மற்றும் தனித்துணை வட்டாட்சியர் (கனிமம்) ஆகியோரை மிரட்டி வண்டியை ஓட்டவிடாமல் தடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளது. மேலும், அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்ட முதல் தகவல்

அறிக்கையைப் பரிசீலனை செய்யும்போதும் மேற்சொன்ன சங்கதிகள் இடம் பெற்றுள்ளன.

15. மேலும், குற்ற சம்பவ இடத்தை நிரூபிப்பதற்காக பார்வை மகஜர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.3, அ.சா.4 ஆகியோர்கள் தங்களது முதல் விசாரணையில் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், காவல் துறையிடம் கையெழுத்து செய்து கொடுக்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர். ஆகவே, குற்ற சம்பவம் அரசு தரப்பால் சொல்லப்படும் இடத்தில் தான் நடந்ததா என்ற சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுந்துள்ளது.

16. இருப்பினும், எதிரிகள் தான் மேற்படி குற்ற நிகழ்வில் ஈடுபட்டார்கள் என்பதை நிரூபிப்பதற்கு அவர்களை கைது செய்து, பின் அவர்களிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதைப் பற்றி விரிவாக பார்க்க வேண்டியுள்ளது.

## X. கைது, ஒப்புதல் வாக்குமூலம், அதன் அடிப்படையில் கைப்பற்றுதல்

17. மேற்படி குற்ற சம்பவத்தை எதிரிகள் தான் செய்தார்களா என்று அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்யவேண்டும். அவ்வாறு பார்க்கையில், இவ்வழக்கில் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் "இந்த வழக்கில் சம்பவத்தின்போது எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சான்று பொருட்களை கைப்பற்றி அத்தாட்சி, மகஜர் போன்ற ஆவணங்களை தயார் செய்யவில்லை என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

18. மேலும், "2 யூனிட் மணலை திருடிச் சென்றதாக எனது புகார் மற்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை என்றும், கைப்பற்றியதாக சொல்லப்படும் மணல் என்ன வகையான மணல் என்றும், சட்டவிதிகளின்படி ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான் என்றும், Mines & Minerals விதிகளின் படி நான் மணலை கைப்பற்றியிருந்தால் அதை அத்தாட்சியில் கைப்பற்றி அதன் தன்மையை ஆய்விற்கு அனுப்பி அதை நீதிமன்றத்திற்கு அனுப்பியிருப்பேன் என்றால் சரிதான் என்றும், மேற்படி மணல் எந்த இடத்தில் இருந்து எடுத்து வரப்பட்டது என்று அந்த இடத்தை ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், மேற்படி திருடப்பட்ட மணல் எடுக்கப்பட்ட இடத்தை ஆய்வு செய்து ஒப்பீடு செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு முறையாக ஆய்வறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

19. மேலும், இவ்வழக்கில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சி தனது குறுக்கு விசாரணையில் " நான் சம்பவ இடத்திற்கு 08.10.2009ம் தேதியன்று சென்று ஆய்வு செய்ததற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், Mines and Minerals Act படி குற்றம் ஏதும் நடந்தால் அது சம்பந்தமாக உரிய அதிகாரி தான் உரிய அனுமதியோடு நீதிமன்ற உத்தரவுப்படி சம்பந்தப்பட்ட நபர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்படவேண்டும் என்றால் சரிதான் என்றும், எதிரிகள்தான் குற்றச் செயலில் ஈடுபட்டார்கள் என்பதற்கு அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான் என்றும், நானோ அல்லது எனது அதிகாரிகளோ சம்பவ இடத்தில் வைத்து

எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், கைப்பற்றப்பட்ட மணலை அத்தாட்சி மூலம் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

20. ஆகவே, மேற்படி பல்வேறு முரண்பாட்டுகளையும், விதிமீறல்களையும், 2வது எதிரி மணலுடன் கூடிய லாரியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தார் என்றோ, 1வது எதிரி இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் மற்ற சாட்சிகளை அலுவலக பணி செய்யவிடமால் தடுத்து கொலைமிரட்டல் செய்தார் என்றோ புலன் விசாரணை அதிகாரி தனது புலன் விசாரணை மூலம் தெளிவுபடுத்தவில்லை. மேலும் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளையோ, பொது மக்களையோ இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரணை செய்யவில்லை. மேலும், பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4 வழக்கு பற்றி எதும் தெரியாது என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். ஆகவே, 2வது எதிரி தான் மேற்படி லாரியில் மணலை திருடிக் கொண்டுவந்தார் என்று எந்த சாட்சிகளும் சாட்சியம் அளிக்காத நிலையில் மேற்படி எதிரிகள்தான் குற்றச் செயலில் ஈடுபட்டார்கள் என்று இந்நீதிமன்றம் நம்ப இயலாது.

**XI. புலன் விசாரணை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் குற்ற நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளதா?**

21. இவ்வழக்கின் சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் திண்டுக்கல் RVS பொறியியல் கல்லூரி அருகே சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளபோதிலும் அங்கு இருந்த பொது மக்களையோ, அங்கு

இருந்த நபர்களையோ இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை. மேலும், இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் யாரும் எதிரியை அடையாளம் காட்டி எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், அ.சா.1, அ.சா.2, அ.சா.5 ஆகியோர்கள் காவல் துறையைச் சார்ந்த சாட்சிகளாக உள்ளதால் அவர்களை அக்கறை சாட்சிகளாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி மணல் திருடியதாக சொல்லப்படும் லாரியின் உரிமையாளரை இவ்வழக்கில் விசாரணை செய்யவில்லை. ஆகவே, 2வது எதிரி மணலுடன் கூடிய லாரியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தார் என்றும், 1வது எதிரி இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் மற்ற சாட்சிகளை அலுவலக பணி செய்யவிடமால் தடுத்து கொலைமிரட்டல் செய்தார் என்று அரசு தரப்பால் 1, 2 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 279, 353, 379, 506(i)–ன் கீழான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

22. முடிவாக, 1,2 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 279, 353, 379, 506(i) ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால் 1,2 எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

23. இவ்வழக்கின் 3, 4 எதிரிகள் இவ்வழக்கிலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு C.C. No.1227/2025 ஆக வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருவதால் வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு

மேற்படி வழக்கின் தீர்ப்பின்போது பகிரப்படும் என்று இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

24. இவ்வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28—ம் நாள் செவ்வாய்க்கிழமை இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.04.28 17:58:45 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | சொக்கலிங்கம் த/பெ.சின்ன லெட்சுமணன் | 17.02.2026 | அ.சா.ஆ.1 |
| 2. | அ.சா.2 | ஜோதி க/பெ. தினகரன் | 24.02.2026 | — |
| 3. | அ.சா.3 | வீராச்சாமி த/பெ. ரங்கராஜ் | 09.06.2026 | — |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | அ.சா.4 | ரவி<br>த/பெ. ரங்கராஜ் | 09.03.2026 | – |
| 5. | அ.சா.5 | அரங்கநாயகி<br>த/பெ. ரெங்கசாமி | 07.04.2026 | அ.சா.ஆ.2<br>முதல்<br>அ.சா.ஆ.5 |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.1 | 08.10.2009 | புகார் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.5 | 08.10.2009 | முதல் தகவல் அறிக்கை |
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.5 | 08.10.2009 | மாதிரி வரைபடம் |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.5 | 08.10.2009 | பார்வை மகஜர் |
| 5. | அ.சா.ஆ.5 | அ.சா.5 | 08.10.2009 | படிவம் 91 |

**III. அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்** – இல்லை

**IV. எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்** – இல்லை

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.04.28 17:58:53 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**குறிப்பு:–**

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. இவ்வழக்கின் விசாரணையின்போது 1,2 எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.